## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# O.S. No. 195/2020

25.09.2024

## D.W.1- ஜெயபாலன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கில் நான் தரப்பினராக இல்லை. எனது மனைவி தான் தரப்பினர். எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். உடல்நிலை சரியில்லை என்பதற்கான மருத்துவ சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எனது மனைவி கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும். எனது மனைவி 4/5 பங்கு சொத்தை வாங்கியுள்ளார். தாவா சொத்தானது விக்கிரமங்கலம் கிராமத்தில் உள்ளது. மேற்படி சொத்திற்கான சர்வே எண். 235/1பி, 235/2பி ஆகும். மேற்படி சொத்தானது ஆதியில ் ஆறாம்புலித்தேவருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது. ஆறாம்புலித்தேவர் வாதியின் தந்தை என்றால் சரிதான். வழக்கு சொத்தை ஆறாம்புலித்தேவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் ஆறாம்புலித்தேவரும், அவரது சகோதரர்களும் ் 2014ல ் எனக்கு ஒத்தி வைத்தார்கள். ஆண் பிள்ளைகள் மற்றும் அவரது தகப்பனாரிடம் மட்டும் தான் ஒத்தி வாங்கினேன். பெண் பிள்ளைகளிடம் ஏன் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சொந்தக்காரர்கள் என்பதால் வாங்கவில்லை. ஒத்தி பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால ் பதிவு செய்யப்படாத ஒத்திப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல ் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியோ, தகப்பனாரோ எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஒத்திபத்திரம் இருப்பதாக நான் உற்பத்தி செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் பங்கை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். பிரிவினையில்லாத 4 பங்கை வாங்கியதால் வாதியின் பங்கையும் சேர்த்து அனுபவம் செய்துவருவதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. ஒத்திப்பத்திரம் எதுவும் இல்லையென்றும்,அனுபவம் செய்து வரவில்லை என்றும் சொன்னால்

சரியல்ல. என் மனைவி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தில் ஏற்கனவே ஒத்த வாங்கி அனுபவம் செய்து வருவதாகவும், அதன்பின்பு கிரையம் பெற்றதாக வாசகம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரையப்பத்திரத்தில் கிரையம் பதிவு செய்த தேதியிலிருந்து தான் 4/5 பங்கை ஆண்டனுவிக்க வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். எனது மனைவிக்கு கிரையம் கொடுத்தவர்கள் நாங்கள் அனுபவிக்கும் சொத்தை கிரையம் கொடுப்பதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் உள்ள வாசங்கள் அனைத்தும் உண்மைதான். அதனை நான் மறுக்கவில்லை. தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் வாதியின் சகோதரர்கள் என் மனைவிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பாக வாதியிடம் கேட்டிருக்க வேண்டும், வாதி கிரையம் வாங்க மறுத்தால் என்னுடைய மனைவிக்கு கிரையம் கொடுத்திருக்க வேண்டும், எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் வாதியிடம் எதுவும் கேட்காமல் கூட்டுக்குடும்ப சொத்தை என் மனைவிக்கு கிரையம் கொடுத்ததால் தாவா சொத்தை முன்னுரிமைப்படி வாதியிடம் கேட்டுவிட்டு தான் கிரையம் வாங்கியிருக்க வேண்டும், ஆகவே வாதிக்கு கிரையம் வாங்குவதற்கு முன்னுரிமையுள்ளது என்றால் வாதியிடம் கேட்டபிறகு தான் விலை கட்டுபடியாகததால் தான் என் மனைவிக்கு கிரையம் கொடுத்தார்கள். அவ்வாறு வாதியிடம் எதுவும் கேட்கவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடமிருந்து கேட்டதற்கான வழக்கறிஞா அறிவிப்பு எதாவது இருக்கிறதா என்றால் இல்லை. ஏற்கனவே எனது மனைவி பெயரில் வாங்க முயற்சி செய்த போது வாதி தனது குடும்ப பங்குதாரர்களிடம் சென்று நான் வாங்கி கொள்கிறேன், வெளி ஆட்களுக்கு விற்க கூடாது என்று கேட்டதற்கு வாதியிடம் வெளியாட்களுக்கு விற்கமாட்டோம் என ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு தெரியாமல் மறைத்து கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி கிரையம் வாங்க தயாராக இருந்தபோதும், என் மனைவி சட்டத்தை மீறி கிரையம் வாங்கியதால் என் மனைவி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. வாதிக்கு முன்னுரிமையுள்ளது, அதை மறைத்து கிரையம் பெற்று அவரது

அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அனுபவம் என்னிடம் தான் உள்ளது. அவ்வாறு அனுபவம் செய்து வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.09.25 16:19:46 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.